IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# Water Management In Sankam Literature
# (சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை)

**முனைவர் ப.சு. மூவேந்தன்,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அ.சு.சு. அரசு கலைக்கல்லூரி, திருத்தணி – 631209, திருவள்ளூர் மாவட்டம். தமிழ்நாடு-இந்தியா

**Dr. P.S. Mooventhan,** Associate Professor, Department of PG Tamil,
S.S. Government Arts College, Tiruttani-631209, Tiruvallur Dist. Tamil Nadu, India. 9443640609

**Abstract**

Sankam Period Tamils lived a life in harmony with nature. They compared everything they saw to nature. Nature is present in all the works of art and literature of the Tamils. Sankam poets have taken great care to protect the land from natural disasters and to preserve the natural resources. They have acquired scientific and technical knowledge about how to clean and use water provided by natural resources and how to conserve clean water and use it according to need. The need for water has been emphasized during the Sankam period. As we have developed in information technology, science, economy and literacy, we do not think that we should conserve the water resource levels that increase the water resources and use it wisely in times of famine. This article explains that the scientific and technological knowledge of the ancient people is still known today.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். அவர்கள் தாம் காணும் பொருள்கள் எல்லாவற்றையும் இயற்கையோடு பொருத்தி வைத்திருந்தனர். தமிழர்களின் கலைப்படைப்புகள், இலக்கியங்கள் ஆகிய அனைத்திலும் இயற்கை கலந்து இருப்பதனைக் காணலாம். சங்கப் புலவர்கள் நிலத்தை இயற்கை அழிவுகளில் இருந்து காக்க வேண்டும் என்பதிலும், இயற்கை வளங்களை அழிவுபடாமல் நிலைநிறுத்த வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்தியுள்ளனர். இயற்கை வளத்திற்கு மூலமாக அமைந்திருக்கும் நீரை எவ்வாறு சுத்தப்படுத்திப் பயன்படுத்துவது என்பதனைப் பற்றியும், சுத்தமான நீரைப் பாதுகாத்து தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவது பற்றியதுமான அறிவியல் நுட்ப அறிவினைப் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் நீரின் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பம், அறிவியல், பொருளாதாரம், கல்வியறிவு ஆகிய அனைத்திலும் வளர்ச்சியடைந்துள்ள நாம், நீர்வளத்தைப் பெருக்கித் தரும் நீர் ஆதார நிலைகளைக் காத்து, பஞ்ச காலத்தில் நுட்பமாகப் பயன்படுத்த வேண்டும் என்று சிந்திக்கவில்லை. பழங்கால மக்களது அறிவியல் தொழில்நுட்ப அறிவு இன்றைக்கும் அறியத்தக்க செய்திகளாக அமைந்திருக்கின்றன என்பதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள் :**

சங்கம், சங்க இலக்கியம், நீர் மேலாண்மை, சேமிப்பு, பாதுகாத்தல், பயன்படுத்துதல்.

**Key words:**

Sankam, Sankam Literature, Water Management, Storage, Conservation, Utilization.

**ஆய்வு அணுகுமுறை (Research Methodology) :**

இந்த ஆய்வுக்கட்டுரையில் விளக்கமுறை (Descriptive Research Methodology) மற்றும் பகுப்புமுறையிலான (Analytical Research Methodology) ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

**முன்னுரை-நோக்கம் (Introduction: Abjectives)**

சங்கத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கைக்கு உரியவர்கள். அவர்கள் தாம் காணும் பொருள்களிலெல்லாம் இயற்கை அழகுணர்ச்சியை நிறைத்து வைத்திருந்தனர். தமிழர்களின் கலைப்படைப்புகள், இலக்கியங்கள் ஆகிய அனைத்திலும் இயற்கை ஊடுருவி நிற்பதனைக் காணலாம். சங்கப் புலவர்கள் நிலத்தை இயற்கை அழிவுகளில் இருந்து காக்க வேண்டும் என்பதிலும் இயற்கை வளங்களை அழிவுபடாமல் நிலைநிறுத்த வேண்டும் என்பதிலும் இயற்கை வளத்திற்கு மூலமாக அமையும் நீரை எவ்வாறெல்லாம் காத்து, தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்த வேண்டும் என்பதிலும் கருத்தாக இருந்துள்ளனர் என்பதனை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நீரும் நிலமும்**

நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய இயற்கைப் பொருள்களின் சேர்க்கையால் உருவானதுதான் நாம் வாழும் உலகம் என்பதனைச் சங்கப் புலவர்கள் நன்கறிந்திருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டே தொல்காப்பியர் “நிலம் தீநீர் வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்” (தொல். 89:1-2) என்று குறித்துள்ளார்.

திருவள்ளுவர் “விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே பசும்புல் தலை காண்பது அரிது” (குறள். 16) என்று நீரின் அருமையினை எடுத்துரைத்தார். அத்தகைய நீரைச் சேமித்து வைத்து, மழை இல்லாக் காலங்களில் பயன்படுத்தச் செய்யுமாறு குடபுலவியனார் என்னும் புலவர், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு

**“நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோரம்ம இவன் தட்டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே”** (புறம். 18:28-29)

என்று அறிவுறுத்துகிறார். இயற்கை வளத்திற்கு மூலமான நீர் ஆதாரத்தைப் பெருக்குவதே மன்னனது தலையாய கடமையாகும் என்பதைக் இவ்வாறு குறித்துள்ளார். “எங்கெங்கு நீரைச் சேமித்துவைக்க முடியுமோ அங்கெல்லாம் சேமித்து வைத்துக் கொண்டு, சேமித்தவற்றைத் தேவைப்படும் காலங்களில் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த அறிவுடைமையாகும்” என்ற கருத்தினைச் சங்கப் புலவர்கள் எடுத்துரைத்துள்ளனர். நீரை எவ்வாறெல்லாம் சேமித்து வைக்கலாம் என்ற கருத்து புறநானூறு,

**"அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்**
**தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ''** (புறம்.118)

என்று புலப்படுத்துகின்றது. இதில் நீர்நிலைகளைத் தேங்கிவைக்கும் ஏரி எவ்வாறு அமைக்கப்பெற வேண்டும் என்ற கருத்துப் புலப்படுத்தப்பட்டுள்ளது. ஏரிக்கரையின் நீளம் குறைவாகவும், அது அதிக நீர் அளவைக் கொள்ளளவாகக் கொண்டதாகவும், சுருக்கமாகச் சொன்னால் அது எட்டாம் பிறைச்சந்திரனை ஒத்த வடிவிலும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது.

**நீரின்மையால் நேரும் அவலங்கள்**

நீரின்மையால் நிலத்தின் தன்மை வாழ்வதற்கு அற்ற நிலை ஏற்படுவதனைக் கலித்தொகை,

**“உண்ணீர் வறப்ப புலர்வாடும் நாவிற்குத்**
**தண்ணீர் பெறாஅத் தடுமாற் றுருந்துயரம்**
**கண்ணீர் நனைக்கும் காடு”** (கலி. 6:4-6)

என்று எடுத்துரைக்கின்றது. இதேபோன்று பாலைநிலத்தின் வெம்மையும், அதனால் வாடும் மனிதர்களின் நிலையும்,

**“மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்**
**அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்**
**அவ்வரை.....”** (ஐங். 301:1-3)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலில் காட்சிப்படுத்தப்படுகின்றது. இதனால் சங்கப் புலவர்கள் இயற்கை வளத்திற்கு முதன்மை ஆதாரமான நீர்நிலையைக் காத்தலை முதன்மையான கடமையாக மன்னர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

**நீரைக் காத்தல்**

வானினின்று நிலத்தில் விழும் நீரே அனைத்திற்கும் அடிப்படையாய் அமைகின்றது. இதனை உணர்ந்த பண்டைத்தமிழர் நீரைத் தம் உயிரினும் மேலான ஒன்றாகக் கருதிப் போற்றியுள்ளனர். மழைநீரைச் சேமித்து வைத்து, சேமித்துவைத்த நீரைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலமாகவே வேளாண்மையைச் செழிக்கச் செய்யமுடியும் என்று நம்பியுள்ளனர். இவ்வாறு நீரினைச் சேமிக்கும் முறைகளை இளங்கோவடிகள்,

**“இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்**
**பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப**
**மழைபிணித்து ஆண்ட மன்னவன்”** (வரி. 26-28)

என்று எடுத்துரைக்கின்றார்.

சிறுபஞ்ச மூலத்தில் குளம், கிணறு, ஏரி முதலானவற்றை அமைத்து நீர்நிலைகளைக் காத்து வைப்பவர் சொர்க்கத்திற்குச் செல்வார் என்ற கருத்து அறமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகத்தில், நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தி,

**"வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்**
**தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்**
**கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்**
**நல்குரவு சேரப்பட்டார்''** (பா. 83)

என்று எடுத்துரைக்கப்படுகின்றது. தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ, அதுபோல் வாய் நன்கு அமையாத குளமும் சிறப்பின்றி இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருமளவில் பெருக்கெடுத்து வரும் வெள்ளநீரைத் தம்முள் அடக்கிக் கொள்ளும் ஏரிகள் ஒருநாட்டில் நிறைந்திருப்பது அந்நாட்டுக்குச் சிறப்புத் தரும் என்பதனை, “யாறுள் அடங்கும் குளமுள வீறுசால்” என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகின்றது. இப்பாடலில் குறிக்கப் பெறும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர், நீரின் சேமிப்பு முறையை வெளிப்படுத்துவதாகத் திகழ்கின்றது.

**"பெருங்குளக் காவலன் போல**
**அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே''** (25)

அதாவது பனியிலும், மழையிலும் அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவில் ஏரியைக் காக்கும் காவலன்போல, குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள் சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணை இமை காப்பதுபோல் காத்த செயலும், நீர் நிலைகளைக் காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு உள்ளன.

பழந்தமிழ் நூல்களில் இத்தகு நீர்நிலைகளிலிருந்து மிகுநீரை வெளியேற்றக் கலிங்கு என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன. இத்தகு தொழில்நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இதனை வெளிப்படுத்தும் கல்வெட்டுச் சான்றுகளும் பல உள்ளன.

மணிமேகலையில் அறவணர் தொழுத காதையில், புத்ததேவனின் அறிவுரை நீர் வருகையின் தோற்றத்தோடு பொருந்தவருமாறு எடுத்துரைக்கப் படுகின்றது.

**"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி**
**இரும்பெரு நீத்தம் புகுவது போல**
**அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்**
**உளமலி உவகையொடு உயிர்கொளப் புகும்''** (13:84-87)

சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய் அதாவது, பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்குத் தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கும் அளப்பரிய வகையில் பயன்தரும். அதுபோல செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துக்கள் உள்ளத்தைச் சென்றடையும் என்ற கருத்து எடுத்துரைக்கப்படுகின்றது. அக்காலத்தில் மக்கள் நன்கு அறிந்திருந்த செய்தியாகிய சுருங்கையின் செயல்பாட்டோடு புத்த்தேவனின் கருத்தியல் திறம் ஒப்புநோக்கி எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் பெருக்கெடுத்து மிகுவேகத்தில் ஓடிவரும் நீரைக் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தடுப்பதற்கு மிகுந்த தொழில்நுட்ப அறிவு தேவைப்படும். வருகிற நீரைக் கற்கள் கொண்டு தடுப்பதால், இத்தகு தடுப்பணை கற்சிறை என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் "பெருகிவரும் படையை ஒரு வீரன் தடுத்து நிறுத்திப் போராடிய செயல், ஆற்று வெள்ளத்தைக் கற்சிறை தடுத்து நிறுத்தும் செயல்பாட்டோடு ஒப்புமையாக்கிக் கூறப்படுகின்றது" (தொல். 725).

**நீரைப் பாதுகாத்துப் பயன்படுத்துதல்**

மனிதத்தூய்மை என்பது பெரும்பாலும் நீரினாலேயே காக்கப்படுகின்றது. இக்கருத்தை வலியுறுத்தும் விதமாகவே, "புறந்தூய்மை நீரான் அமையும்" என்ற குறட்கருத்தும் அமைந்துள்ளது. இதனால் உடலை நீரால் சுத்தம் செய்து இருத்தல் வேண்டும் என்ற உணர்வு பெறப்படுகின்றது. அவ்வாறு குளிக்கும்போது சுத்தமான நீரினாலும், புதிதாகச் சென்று கொண்டிருக்கும் நீரிலேயே நீராடுதல் வேண்டும் என்ற உணர்வு சங்க காலத்தில் மிக்கிருந்ததனை,

**"அனல்குடைப் பனித்துறை ; தொண்டி அன்ன**

**மணம் கமழ் பொழில்"** (174:2-3)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் புதுவெள்ளத்தில் நீராடுதல் உடலுக்கும் மனதுக்கும் மகிழ்வைத் தரும் என்ற குறிப்பும் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது.

புதுவெள்ளம் என்பது நீர்நிறைந்து பெருக்கெடுத்தோடி வரும் நீரினைக் குறிப்பதாகும். ஆதலால் புதுவெள்ளத்தில் நீராடுவதனைச் சங்க கால மக்கள் பெரிதும் விரும்பியுள்ளனர். இவ்வாறு வருகின்ற வெள்ளமானது மூலிகைச் செடிகளோடும், பல்வேறு மலர்களோடும், இலைகளோடும், தழைகளோடும் கலந்து வரும். அதனால் அப்புதுவெள்ள நீரானது அப்போது நீராடும் மக்களுக்கு மருந்தாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. புதுவெள்ளத்தில் நீராடிய செய்தியினை,

**"முளிஇலை கழித்தன முகிழ் இணரோடு வரும்**

**விருந்தின் தீம்நீர் மருந்துமாகும்"** (53:7-8)

என்னும் நற்றிணையின் அடிகள் எடுத்துரைக்கின்றன. புதுவெள்ளத்தில் நீராடிய நிகழ்ச்சியினைப் பரிபாடல் விரிவாக எடுத்துரைக்கின்றது. மேலும், அக்கால மக்கள் பெரும்பாலும் ஓடும் நீர்நிலைகளிலேயே நீராடினர் என்பதையும் உணரமுடிகின்றது. மார்கழி, தை மாதங்களில் நீராடுதல் சிறப்பானதாகப் பேசப்பட்டுள்ளது. தைநீராடல் இளமையைத் தரக்கூடியது. என்னும் செய்தியினை,

"**சேய் உற்ற கார்நீர் வரவு**
**நீதக்காய் தைந்நீர் தெளிந்தாய் என்மாரும்**
**.....................................................**
**கிழவர் கிழவியர் என்னாது ஏழ்காறும்**
**மழஉன்று மல்லற்கேள் மன்னுக"** (11:114-121)

என்னும் பரிபாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன.

**குடிநீர்ப் பாதுகாப்பு**

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாது விளங்குவது குடிநீர்.

"**நீரின்று அமையா உலகம் போல"** **(நற். 1-6)**

**"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்"** **(புறம். 18:18)**

**"நீரின்றி அமையாது உலகு"** **(குறள். 20)**

என்னும் அடிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. இந்த நீர் சுத்தமாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

உலகில் மக்களைத் தாக்கும் பெரும்பாலான நோய்களுக்குக் காரணமாக அவர்கள் பருகும் குடிநீரே அமைகின்றது. உலகில் மக்களைத் தாக்கும் நோய்களில் 80% விழுக்காடு நோய்கள் நீர்மாசுபாடால் உண்டகிறது.

இத்தன்மையினை உணர்ந்துதானோ என்னவோ, சங்க கால மக்கள் உண்பதற்கும், நீராடுவதற்கும் சுத்தமான நீரினையே பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரியவருகின்றது. இச்செய்தியினை,

**"முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி**

**யாம் காவாஅது உண்டௌன வறிது மாசின்று"** **(புறம். 319:3-4)**

என்னும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. முற்றத்திலுள்ள சாடியில் சிறிய அளவில்தான் நீர் இருப்பினும், அது மாசற்றதாக இருப்பதனால் நீ அதனைப் பருகலாம் என்னும் கருத்தமைந்த பாடலின் வரிகளால் அக்கால மக்கள் மாசற்ற நீரைக், குடிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை உணரலாம்.

சங்க மக்கள் தங்கள் தேவைக்கான குடிநீரைத் தேங்கியிருக்கும் நிலைகளிலன்றி, ஓடும் நீர் நிலைகளிலேயே பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**"நல்மரன் நளிய நறுந்தண் சாரல்**

**கல்மிசை அருவி தண்ணெனப் பருகி"** **(**புறம். 150-15:16)

என்னும் புறப்பாடல் ஓடும் அருவிநீரைப் பருகியமையைப் புலப்படுத்துகின்றது. அருவி நீரின் சுவைத்தன்மையை "நறுந்தண் சாரல்" என்ற சொல்லாட்சி புலப்படுத்துகின்றது. மேலும்,

**"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**" (குறு. 196:3-4)

என்னும் குறுந்தொகைப்பாடல் அடியும்,

**"சுனைநீர் தீம்நீர்ச் சோற்றுஉலைக் கூட்டும்"** (பரி. 169:7)

என்னும் அகநானூற்றுப் பாடலடியும் சுனைநீரைப் பயன்படுத்தியமையைக் காட்டுகின்றன. இச்செய்திகளால் அக்காலத்து மக்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தும் நீர் கலங்கலின்றித் தெளிவாக

இருக்கவேண்டும் என்று கருதியதைப் புலப்படுத்துகின்றது. அவ்வாறே சமைப்பதற்கும் சுனைநீரைப் பயன்படுத்தியமை புலனாகின்றது.

மேலும் பனிக்காலத்தில் சூடாக்கிய நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்திய செய்தியினையும், அதனைச் சேமக்கலத்தில் வைத்திருந்து தேவைப்படும்போது பருகியதையும்,

**“அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்**

**சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே”** (குறு. 277:4-5)

என்னும் குறுந்தொகைப்பாடலின் அடிகள் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

சங்கப் புலவர்கள் பெற்றிருந்த இயற்கை நேயம், இயற்கை மீதான காதல், இயற்கைச் செல்வங்களான மலைகள், ஆறுகள், அருவிகள், காடுகள், சமவெளிகள் மீதான அழகியல் தன்மை, இயற்கைப் படைப்புகளான தாவரங்கள், செடிகொடிகள், பறவைகள், விலங்கினங்கள் பற்றிய அறிவுப்புலம் முதலானவை படிப்பவர்க்கு வியப்பானவையாக அமைந்துள்ளன.

பண்டைத்தமிழர்களின் அறிவுநுட்பத்துக்கு அவர்தம் இயற்கையைக் காக்கும் திறம் சான்றாக அமைந்திருக்கின்றது. சமுதாயத்தில் நீரியலில் தூய்மை காக்கப்பட்டுள்ளது. இயற்கையின் காலமாறுபாடுகளையும், இன்றியமையாமை யினையும் அறிந்து வைத்திருந்துள்ளனர். பருவ மாறுபாடுகளையும் அறிந்து அவற்றிற்கேற்ற வகையில் வாழ்க்கை நடத்தியுள்ளனர். குளிக்கும் நீரிலும், குடிக்கும் நீரிலும் தூய்மையைப் பேணியுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

**பார்வை நூல்கள் :**


1. கு.வெ.பாலசுப்பிரமணியன், (ப.ஆ.) மற்றும் பிறர், சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பி.லிட், சென்னை. 2000
2. இளம்பூரணர் (உ.ஆ.) தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை. 1978
3. டாக்டர் உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.) மணிமேகலை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1
4. புலியூர்க்கேசிகன், (உ.ஆ.), சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை 1980
5. மு. வரதராசன், (உ.ஆ.) திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, 1980
6. ச.வே. சுப்பிரமணியன், (உ.ஆ.) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000


**Reference Books :**


1. Dr. K.V.Balasubramanian, (P.A.) and others, Volume of Sankam Literature, New Century Book House P.Ltd, Chennai. 2000

2. Ilampuranar (D.A.) Tholkappiyam, Porulathikaram, Kazhagam Publication, Chennai. 1978

3. Dr. U.V. Saminathayar (P.A.) Manimekalai, Kabeer Printing House, Chennai, 1970

4. Puliurkesigan, (D.A.), Silappathikaram, Pari Publishers, Chennai 1980

5. Dr. M. Varadharasan, (D.A.) Thirukkural, Kazhagam Publication, Chennai, 1980

6. S.Ve. Subramanian, (D.A.) Pathinenkeezh kanakku Noolkal, Manivaskar Publishing House, Chennai, 2000